கடவுள் துணை.

...ணை முத்துகுமரன் தியானம்

என்னும்

கந்தர் பஜனமூர்தம்

K. T. R. வேணுகோபால் தாஸ்

அவர்களியற்றியது.

K... ...ர முதலியார் பதிப்பு

[விலை அணா 1.

...935.

Q26:38.2111
N35

கடவுள் துணை.

சென்னை முத்துக்குமரன் தியானம்

என்னும்

கந்தர்பஜனமுர்தம்

விருத்தம்.

கந்தனை போற்றிட காலனும் அனுகிடா
சிந்தனை தீர்த்திடும் ஜென்மமும் சுயம்பெரும் முந்தி
தொந்தி விநாயகர் தம்பியை அனுதினம்
சிந்தையில் நினைத்தவர் சொர்க்கமே நீகூர்.

மேரே மேளலா என்றமெட்டு.

கந்தா கருணாகரா எனைகார் குமரா
செந்தூர் கிருபாகரா சேவைதாசமரா (க)

ஆதரித்தருள் வேலனே ஆறுமாமுகலோலனே
தீதகற்றிடும் சீலனே தெய்வானை வள்ளி சமேதனே

வா—வா வேல் முருகா—வரம்
தா மருகா (உ)

சென்னை முத்துகுமரனே உன்சேவை தந்தருள் யோகனே
கண்டி கதிரேசனே எனைகார்த்தருள் விஸ்வாசனே

காரும் கருணாகரா பக்தர்
குபகாரா (கா)

சூரரை சம்மாரம் செய்த சுப்ரமண்ய தேசிகா
வீரரையே வேரறுத்த வையாபுரி வாசிகா

171724

வரம்தா முருகா வினை
தீர் முருகா (கா)

வர்ணமயில்வாகனா வேதாந்தமே புகழ்மோகனா
கார்த்திகேயவாசனே என்கவலைதீர்க்கும் நேசனே
கண்பார் கந்தையனே குறை
தீர்த்தவனே (க)

பாவலர்கள் போற்றிசெய்யும் பரமனே உன்தெரிசனம்
நாவலர்கள் அநுதினமும் நம்பிபோற்றும் தெரிசணம்
சென்னை வேணுகீதம் தமிழ்
சங்கு நாதம் (க)

வண்ணான் வந்தானே என்றமெட்டு.

சென்னை முத்துக்குமரன் தெரிசனம்
ஜெகம் புகழ்த்தீரன்
மண்டலந்தன்னிலே மேன்மையாகவே
கண்டவர் பணியும் கந்தன் தெரிசனம்
பார்த்தவர்க்கு பரமானந்தம் எங்கும்
பேசிடுவார் நித்யானந்தம்
இணையில்லாதது உற்சவம்
எதிரில்லாதது அந்த
பதினெட்டு நாளினில் பர்பல வாகனம்
பதுமைபோலே பாரில் நடத்திடும்
விஸ்வகர்மா கைதிரமே நெல்ல
வேலையாட்கள் செய்தீரமே
தெரிசன காக்ஷி கண்டோர்
தவமதின் சூக்ஷி அங்கே

2117
784.0954

செய்முறையாக சாத்துபடியே
வையக மீதினில் வைதீகர் செய்திடும்
ஆறுமுகன் அலங்காரமே புஷ்ப
ஆராதனை நெய்வேத்யமே
ஆறுமுகன் சேதி இந்த
அகிலமே கியாதி எங்கும்
காவடி கூட்டங்கள் கோடான கோடி
ஆவலாய் செய்திடும் அற்புத சேவடி
வேணுகவி பாடிடுவார் சென்னை
வாளிபர்கள் புகழ்ந்திடுவார்

CA2613 ...

சென்னை கந்தசாமி கோவில் பதினெட்டு நாள் உற்ஸவ வைபவம்

கிளிக்கண்ணி வர்னமெட்டு.

1 சென்னை முத்துக்குமரன் சன்னதியில் நடக்கும்
உன்னத உற்ஸவத்தை மயிலே
உரைத்திடுவாய்

2 அனுதினம் நடந்திடும் அற்புதவாகனத்தை
மானிடர் கண்டுவிட மயிலே
மறுமுறை சொல்

3 கர்ப்பக காமதேனு கண்டவர் புகழ்ந்திட
ஓராம் நாள் நடந்திடுவார் மயிலே
ஒய்யாரம் பேசிடுவார்

4 சிங்கவாகனமேறும் ஷண்முகன் பவனியில்
இரண்டாம்நாள் செய்திடுவார் மயிலே
இன்பமாய் வணங்கிடுவார்

5 சூரபத்மாவீரனை சிரசதை வெட்டிநின்ற மயிலே
மருமகனின் தெரிசனமே
மூன்றாம்நாள் கேள் மனமே

6 நாகவாகனமின்று நங்கையே போய்வருவோம் மயிலே
நாகரீக ஆடைகளை
நான்காம்நாள் நடத்திடுவாய்

7 மயில்வாகன சேவையை மங்கையே பார்த்திடுவாய் மயிலே
ஐந்தாம் நாள் வேடிக்கையே
ஆயாசம் தீர்த்திடுவாய்

8 ஆனைவாகனமீது ஆனந்த மாகவரும் மயிலே
ஆறுமுகன் சேவடியே
ஆறாம்நாள் வழிமுறையே

9 தேரின்மேல் ஏறிநின்ற தண்டபாணி பெருமை மயிலே
ஏரகவாசனடி
ஏழாம்நாள் வந்திடடி

10 குதிரை வாமனமீது குமரன் பவனிருக்க மயிலே
கட்டாயம் பார்த்திடுவாய்
எட்டாம்நாள் தங்கிடுவாய்

11 கையிலங்கிரியைபோலே கைலாச பருவதம் மயிலே
ஒப்பார பெண்ணரசே
ஒன்பதாம் தேதி என்பார்

12 பழனியாண்டவர் வேடம் பத்தாம்நாள் யாவர்கூடி மயிலே
அழகான தெரிசனமே
அய்யனின் அருள்வளமே

13 தண்ணீரில் தான்சுழல் தெப்ப உற்ஸவமென்று மயிலே
பாண்டவர் நாளையிலே
பதினோராம் நாளையிலே

14 கண்களை பரித்திடும் கண்ணாடி பல்லாக்கிது
பனிரெண்டாம் நாளையிலே மயிலே
பார்த்தவர் சொல்வாரடி

15 மங்களகிரி இந்திரன் மருகன் வாகனவீரன்
பாங்கான பெண்ணரசே மயிலே
பதிமூன்றும் நாளையிலே

16 வெள்ளானையுடன் தெய்வ வாகனமீதிலேரி
பலமான வம்சமடி மயிலே
பதினன்காம் நாளையிலே

17 வேடர் பரிணயமே வள்ளியின் கல்யாணமே
பாடகர் பேரின்பமே மயிலே
பதினைந்து பதினறிலே

18 வளவுசேர்வைமீது வடிவேலன் குந்திகொண்டு
பலவித மானிடர்க்கு மயிலே
பதினேழில் கியாதிகந்த

19 ஆறுமுகத்துடனே அடியாரை கார்க்கயின்று
பெருமையாய் வருவாரடி மயிலே
பதினெட்டாம் கடைசியிலே

20 பதினெட்டு நாளின்சேதி பாலனும் பகர்ந்திட்டேன்
பதிப்பிட கேட்டதினல் மயிலே
பாடினேன் வேணுகோபால்

காந்திரிஷி என்றமெட்டு.

பல்லவி.

ஆனந்தமே கந்தநாதன்
தெரிசனமே (ஆ)

அனுபல்லவி.

ஆனந்தமே கந்தன் ஆனந்தமே
எங்கும் தெரிசனமே முழங்கும் (ஆ)

வாணவர் போற்றும் எங்கள் வள்ளிமணவாளனே
வேலாயுதம் பிடித்தவைய்யாபுரி லோலனே
ஞானமே நிறைந்த ஞானிகளின் சீலனே
நம்பினேன் வரமருள்வாய் நாவலர்க்குகந்தவனே
பேரின்பமே சென்னை கந்தன்
தெரிசனமே (அ)

தெய்வானை மணமுடித்த தண்டாயுதகுகனே
தேவர்கள் பாடதினம் தெரிசித்திடும் சண்முகனே
வைய்யாபுரியமர்ந்த வேலாயுதசுதனே
வேண்டினேன் வேணுகோபால் வித்தையருள்பவனே
ஆனந்தமே கந்தநாதன்
தெரிசனமே (ஆ)

பாலாபிஷேகம் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

ஸ்ரீ முத்துக்குமரனைப் பணிந்திடுவோமே
ஜென்ம சாபல்யம் அகற்றிடுவோமே (ஸ்ரீ)

அநுபல்லவி.

சோமுகா சூரனை தாமத மின்றியே
சம்மாரம் செய்திட்ட சண்முகனும் (ஸ்ரீ)

சரணம்.

திருப்பரங்கிரிவளர் தமிழ்குபகாரன்
திருப்புகழ் மணமகிழ் தெய்வானை நேதன்

வாசன்ப்ரகாசன் நேசன்
முருகேசன் பக்தர்கள் பணிந்திடும்
அன்புடையான் (ஸ்ரீ)
பதினெட்டு நாளினில் பார்த்திடலாகுமி
பதிபுகழ் ஆறுமுகன் தெரிசனமாகுமி
எங்கும் பிரசங்கம் புகழ்கவி
சிங்கம் சங்கீத வேணுகவி
முழங்கும் (ஸ்ரீ)

17172
001 008.
26.5.2011

காமிசத்யபாமா கதவைதிறவாய் என்றமெட்டு.

வள்ளி கல்யாணம் வைபோக
ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் குற வள்

வளையசெட்டியைப்போல வேடம் கொண்டகுமரன்
தினைவனம் சென்ற மருகன் மருகன்
முருகன் முருகன் குற வள்

பால்யபெண்களுக்கேற்ற பச்சைவளையலென
குமரிமுன் சொன்ன வேடனும் வேடனும்
வேடனும் வேடனும் குற வள்

தேனும் தினையுண்டதும் தாகம் தவிக்குதென்று
சுனைக்கேகிநின்ற வேலனும் வேலனும்
வேலனும் வேலனும் குற வள்

வேடரண்ணனூர் முன்னே வேங்கைமரமாய் நின்று
சந்யாசியான குமரன் குமரன்
குமரன் குமரன் குற வள்

அண்ணனை தான்துதித்து ஆனைவர நினைத்து
அலையவிடுத்த சமரன் சமரன்
சமரன் சமரன் குற வள்

பாலாபிஷேகயோக பாதுக்கார் ஞானதியாக
பாவை கல்யாணம் செய்குவேன் செய்குவேன்
செய்குவேன் செய்குவேன் குற வள்

ஆனைமுகத்தைகானுள் ஆறுமுகனைகண்டாள்
அபசாரம்வேணு கவியே கவியே
கவியே கவியே குற வள்

கந்தர் பஜனாமிர்தம் முற்றிற்று.

ஒவ்வொரு குடும்பத்திலும் இன்றியமையாத
ஆயுள்வேத சிகிச்சாரத்தினமென்னும்
குடும்ப வைத்தியம்
இதன் விலை ரூபா 1 8 0
தேவேந்ரநாத் மாயாஜால விநோதம் 1 0 0
மதிமோசக் களஞ்சியம் 1 0 0
ஷை இரண்டாம் பாகம் 1 0 0
கொக்கோகம் 1 0 0
ஜாதககணிதாரம்பம் என்னும் சோதிட ஆசான்
நாலுபாகம் கட்டடம் இதன் விலை ரூ 3—8—0
ஸ்ரீ கணேசர் திருப்புகழ் 100 பாடல் விலை அணா 0—4—0
தசாவதார மகிமை, இதன் விலை அணா 0—1—0
ஷண்முகானந்த புத்தகசாலை
5/34, நயினியப்ப நாய்க்கன் தெரு, பார்க்டவுன் சென்னை.

செல்வரங்கன் பிரஸ், மதருஸ்.

17174
3-66

காமநூல் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்பவருக்கு உண்மையான 64-லீலா விநோதப்படங்களுடன் கூடிய கொக்கோக நூல் வெளிவந்துவிட்டது போலிப் புத்தகங்களைக்கண்டு ஏமாறாமல் K. A. மதுரை முதலியார் பதிப்பித்ததாகப் பார்த்து வாங்கவும்.

கொக்கோகம்

என்னும்

இரதிமன்மதன் திருவிளையாடல்.

உண்மையான மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி, ஆண் பெண் சரீர அமைப்பு, நான்கு வகைப் பெண்களின் லக்ஷணம், சம்போகம் செய்ய வேண்டிய முறை, காதல் இலக்கணம், அமுதநிலை சோதனை, ஆலிங்கன வகைகள், பெண்களை வசீகரப்படுத்தும் மார்க்கம் முதலிய மர்மமான அநேக சிறந்த விஷயங்கள் அடங்கியுள்ளன 64 மதன லீலா சாஸ்திரத்துக்குரிய படங்கள், இரதி மன்மதனது திரு உருவப்படங்கள், மதனசக்கரபடம் (பூஜாவிதானக்கோடு), அமுதநிலை சக்கரம், ஸ்ரீ பஞ்சாக்ஷர மஞ்ஞை வசீகர சக்கரம் முதலியவை பளபளப்பான கடிதத்தில் விலை ரூ 2.

ஜாதக கணித ஆரம்பம் என்னும்

சோதிட ஆசான்

ஒரு மாதத்தில் தானே சோதிடம்

கற்றுக்கொள்ளலாம்.

பிரதி பாகம் ரூ 1. 4 பாகம் கட்டடம் ரூ. 3-8-0

ஷண்முகானந்த புத்தகசாலை, பி. டி, சென்னை.

டைட்டல் பேஜ் மாத்திரம் ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பிக்கது.